**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் -290**

**நிறுவனத்தின் பெயர-மாவட்ட செயலகம் மாத்தளை பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) ன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

| செயற்குழுவினால் கண்டறியப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்/தற்போதைய நிலைமை |
|---|---|
| 01. 2018 ஆம் வருடத்திற்கான சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கணக்கு தணிக்கையாளர் நாயகத்திற்கு சமர்பிக்கப்படவில்லை | ➢ 2019 ஆம் வருடத்திற்கான மாத்தளை மாவட்ட செயலகத்தின் கழிப்பனவு அறிக்கையானது 2020.12.24 ஆந் திகதியன்று எனது இலக்கம் 1/2/15/COG மற்றும் 2020.12.24 திகதிய கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01)<br><br>➢ 2020 ஆம் வருடத்திற்கான கழிப்பனவு அறிக்கையானது 2021.11.23 ஆந் திகதியன்று எனது இலக்கம் DSM/ACC/15/1/1 மற்றும் 2021.11.23 திகதிய கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)<br><br>➢ 2021 ஆம் வருடத்திற்கான கழிப்பனவு அறிக்கையானது, எனது இலக்கம் DSM/ACC/15/1/1 மற்றும் 2023.01.27 திகதிய கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 03)<br><br>➢ 2022 ஆம் வருடத்திற்கான கழிப்பனவு அறிக்கையானது, எனது இலக்கம் DSM/ACC/15/1/1 மற்றும் 2023.11.30 திகதிய கணக்கு தணிக்கையாளர் நாயக அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 04) |
| 02. வருடாந்த பொருட்கள் கணக்கெடுப்புக்கு உட்படாத மிகையான மற்றும் குறைபாடுகள் தொடர்பான அனுமதி மற்றும் வேறு அனுமதிகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் சமர்ப்பிக்கப்படாமை | ➢ மார்ச் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பொருட்கள் கணக்கெடுப்பு நிறைவு செய்வதற்கும், ஜூலை மாதம் 30 ஆந் திகதிக்கு முன் பொது 47 படிவத்திற்கமைய பொருட்களை கழிப்பனவு செய்யப்படாத கணக்கெடுப்பு குழு உறுப்பினர்களுக்கு இனிவரும் காலங்களில் அவ் நடவடிக்கை வழங்கப்படாது என தீர்மானிக்கப்பட்டதுடன், பெயர் குறிப்பிடப்பட்ட பொருட்கள் கணக்கெடுப்பு குழுவின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களை தனிப்பட்ட ரீதியில் வரவழைத்து குறிப்பிட்ட திகதிக்கு கணக்கெடுப்பு நடவடிக்கைகளை நிறைவு செய்வதன் முக்கியத்துவத்தினை பற்றி அறிவூட்டப்பட்டது. பொருட்கள் கணக்கெடுப்பு நிறைவு செய்யப்பட்டவுடன் உடனடியாக மாவட்ட செயலாளருக்கு இது தொடர்பாக எஸ்.எம்.எஸ் குறுஞ்செய்தி மூலம் தெளிவுப்படுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி மாத்தளை மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகங்களில் 2018.12.31 ஆந் திகதிக்கு |

| | |
|---|---|
| | கடந்த வருடத்திற்கான பொருட்கள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்பும் சகல கழிப்பனவு நடவடிக்கைகள் மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பும் நிறைவு செய்யப்பட்டுள்ளது. (இணைப்பு 05,06) |
| 03. மாவட்ட செயலகத்திற்குரிய வாகனங்களின் எரிபொருள் சுடுதல் தொடர்பாக ஆய்வு செய்யாதிருத்தல் | ➢ 2021 ஆம் வருடத்தில் மாவட்ட செயலகத்திற்குரிய வாகனங்கள் 10 இருப்பதோடு அதில் 05 இற்கு எரிபொருள் சுடுதல் ஆய்வு நடாத்தப்பட்டு இருப்பதுடன் இலக்கம் CPKJ -3876 மற்றும் CPGB-8504, BIF3851 ஆகிய வாகனங்கள் கொரோனா தொற்று நோய் நிலைமை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை காரணமாக எரிபொருள் சுடுதல் ஆய்வு நடாத்தவில்லை என்பதோடு 251-3548 என்ற இலக்கத்தைக் கொண்ட கெப் வாகனமானது நீர்பாசன இயந்திர பொறியியலாளர் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. (இணைப்பு 07)<br>➢ 2022 வருடத்திற்கான சகல வாகனங்களின் எரிபொருள் சுடுதல் ஆய்வு நடாத்தப்பட்டுள்ளது.<br>➢ CPKQ-6218 என்ற இலக்கத்தை வகிக்கும் வாகனமானது 2022 மற்றும் 2023 வருடங்களில் இயக்கத்திற்கு உகந்ததற்ற நிலைமையில் இருப்பதோடு புதுப்பிக்கும் நிலைமையில் உள்ளது.<br>➢ 2023 ஆம் வருடத்திற்கான வாகனங்கள் 08 ன் எரிபொருள் சுடுதல் ஆய்வு நடாத்தப்பட்டதுடன் CPKB-0936 என்ற இலக்கத்தை வகிக்கும் வாகனமானத்தின் என்ஜீன் புதுப்பிக்கப்பட்டுள்து. 32-0897 என்ற இலக்கத்தை வகிக்கும் வாகனமானது புதுப்பிக்கப்பட உள்ளது. |
| 04. சகல வாகனங்களின் உரிமம் கோரும் ஆவணங்கள் இருப்பில் இல்லாமை | ➢ மாவட்ட செயலகங்களிற்குரிய சகல வாகனங்களின் உரிமத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மாவட்ட செயலாளரின் பொறுப்பில் பாதுகாப்பாக உள்ளது. |
| 05. ஒரு வருடத்திற்கு மேலாக கடன்கள் நிலுவையில் இருத்தல் | ➢ 2023.12.31 ஆந் திகதிக்கு அனுப்பப்பட்ட அரச உத்தியோகத்தர்களின் முற்கொடுப்பனவு பீ கணக்கிற்குரிய அறிக்கையின் படி மாத்தளை பிரதேச செயலகத்தில் கடமை புரிந்து வேலையிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்ட அலுவலக பணி உதவியாளர் கே.டீ.எஸ்.பீ.குணவர்தன அவர்களின் நிலுவையில் உள்ள கடன் தொகையான ரூ.159,602.00 இனை மாதாந்தம் ரூ.500.00 ஆக அறவிடப்படுகின்றது. |

| | |
|---|---|
| | ➢ மாத்தளை பிரதேச செயலகத்தில் கடமை புரிந்து சேவையிலிருந்து வெறித்தாக்கல் செய்யப்பட்ட டீ.டப்ளியூ.கே.கே.ஜய ஸ்ரீ அவர்களின் நிலுவையில் உள்ள அனர்த்த கடன் தொகையான ரூ.59465.00 இனை நீதிபதி திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டதற்கமைய அவ் நபரிடமிருந்து அறவிடுவதற்கு வாய் மூலம் மற்றும் எழுத்து மூலம் அறிவுரைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. |
| 06. அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தவிர்ந்து அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மிகையான பணிக்குழாம் இணைக்கப்பட்டுள்ளமை. | ➢ அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தவிர்த்து வேறு எவ் ஊழியர்களும் அனுமதிக்கப்பட்ட எல்லைக்கு மிகையாக இனைக்கப்படவில்லை. |
| 07. முழு பணிக்குழாமிற்குமான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | ➢ 2019 ஆம் வருடம் தொடக்கம் 2023 ஆம் வருடம் வரையிலாக பணிப் குழாமிற்கான செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2023.11.30ஆந் தினத்தன்று வெளியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை 02/2018(1) இன் 3 வது அத்தியாயத்தின் பிரகாரம் வருடாந்தம் செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பமிடல் அவசியமற்றது என்பதினை அறிவித்து இருப்பதால் 2024 ஆம் வருடத்திற்கான உடன்படிக்கை நடவடிக்கைகள் எமது அலுவலகத்தில் நடைபெறவில்லை. |
| 08. 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயற்பாடுகள் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை மாற்றம் செய்யாதிருத்தல் | ➢ 2021 வருடத்திலிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு தடவை அரசு ஊதிய மென்பொருள் செயற்பாடுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன |

மேலதிகமாக எனது இலக்கம் 1/2/1/1/38 மற்றும் 2018.08.30 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், நிதி செயற்திறனை உயர்த்துவது தொடர்பாக தேவையான அறிவுரைகள் சகல பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதன்படி ஒவ்வொரு மாதமும் செயற்திறனை மதிப்பீட்டுவதற்காக நியமப்படிவமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் நியமப்படிவத்தின் மூலம் அறிக்கைகள் அனுப்புதல், வங்கி கணக்கிணக்க அறிக்கைகளை பேணுதல், தேவை நிமித்தம் உப பணி முற்பணம் வழங்கல்களை விடுவித்தல், பொது வைப்புக்கான வங்கி கணக்குகளை பேணுதல், செயலற்ற மற்றும் குறைபாடுகளுடன் கூடிய சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல், பொருட் கணக்கெடுப்பு, கழிப்பனவுகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளல், வாகன பதிவுப் புத்தகங்களை பேணுதல், நாளாந்த வாகன இயக்க அறிக்கைகளை கணக்காய்விற்காக முன்வைத்தல், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை கணக்காய்விற்காக வழங்குதல், அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கொடுப்பனவான பீ கணக்கிற்கமைய நிலுவை கடன் தொகை மற்றும் இடமாற்றம் பெற்று செல்லும் மற்றும் வரும் உத்தியோகத்தர்களின் நிலுவையில் உள்ள கடன்களை தீர்த்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக மாதாந்தம் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதுடன் அவற்றில் குறிப்பிடப்படும் குறைபாடுகள் தொடர்பாக பிரதான கணக்காளரினால் மாதாந்தம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். (இணைப்பு 08)

மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் மற்றும் கணக்காளர்களின் வருடாந்த செயற்திறன் மதிப்பீட்டிற்கு நிதி செயற்திறனுக்கு உரிய தகவல்கள் உட்படுத்தப்பட்டுள்ளன.

நிதி செயற்திறனிற்கு உரிய அறிக்கைகள் மாவட்ட செயலகத்திற்கு அனுப்பியதுடன் அதனை பற்றி மாவட்ட செயலாளருக்கு குறுஞ்செய்தி மூலம் அறிவிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள்

வழங்கப்பட்டுள்ளன. அதன்படி அதில் ஏற்படும் குறைபாடுகள் பிரதான கணக்காளரினால் நிவர்த்திச் செய்யப்படும்.

அதன்படி மாத்தளை மாவட்ட செயலகத்தில் 2018.12.31 ஆந் தினதியன்று முடிவடைந்த வருடத்திற்கான பொருட் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2019 பெப்ரவரி மாதம் 28 ஆந் திகதிக்கு முன்பும் சகல கழிப்பனவு நடவடிக்கைகள் மார்ச் மாதம் 31 ஆந் திகதிக்கு முன்பும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2018.12.31 ஆந் திகதிக்கு வருடாந்த செயற்திறன் அறிக்கையினை 2019.02.28 ஆந் திகதிக்கு தயாரிக்கப்பட்டாலும் கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்படும் வருடாந்த கணக்கு கூற்று தொடர்புடன் கூடிய கணக்காய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதினால், அவ் அறிக்கை சமர்ப்பிக்கும் வரை காலம் தாழ்த்தி அதனை பெற்றவுடன் 2019.05.31 ஆந் திகதியன்று வருடாந்த செயற்திறன் அறிக்கையானது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்ககப்படும்.

மேலும் மாதாந்தம் சமர்ப்பிக்கப்படும் கணக்கு முன்னேற்ற மீளாய்வு அறிக்கை மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு இடமாற்றம் பெற்று செல்லும் மற்றும் வரும் சகல உத்தியோகத்தர்களின் நிலுவையில் உள்ள கடன்களை 2018.12.31 ஆந் திகதிக்கு தீர்ப்பதற்கு முடிந்துள்ளது. (இணைப்பு 09)

ஆவணங்களை இற்றைப்படுத்தி பேணுதல் தொடர்பான செயன்முறைகளின் கீழ் சகல பிரதேச செயலகங்களின் கணக்காளர்கள், நிர்வாக உத்தியோத்தர்கள், உரிய விடய பொறுப்பான லிகிதர்கள் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஆகியோருக்கான ஆவணங்களை இற்றைப்படுத்துதல் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது 2019.02.21 ஆந் திகதியன்று மாவட்ட பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது.

2018.12.31 திகதிக்கு கணக்குகளை சரியான முறையில் செலுத்துதல் தொடர்பாக பிரதேச செயலாளர்கள், மேலதிக மாவட்ட செயலாளர்கள் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டப்பட்டுள்ளது. அதன்படி 2018 ஆம் வருடத்திற்கான சகல பற்றுச்சீட்டுக்களையும் (வவுச்சர்) முன்கூட்டியே பெற்று டிசம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது. உப பணி முற்பணம் வழங்கல் இல்லாதிருப்பதால் பணம் செலுத்த பற்றுச்சீட்டுக்கள் (வவுச்சர்) ஏதேனும் இருக்கவில்லை. மேற்குறிப்பிட்டவாறு இதுவரை சரியான முறையில் கணக்கு நடவடிக்கைகள் செய்து வழங்கப்பட்ட காலவரையறைக்குள் அறிக்கைகளை சமர்ப்பித்து மாத்தளை மாவட்டத்தில் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் உயர் நிதி செயற்திறனைப் பேணுகின்றன.

தேஜானி திலகரத்ன,
மாவட்ட செயலாளர்/திசாபதி,
மாத்தளை.
**Thejani Thilakarathne**
District Secretary/Government Agent
Matale.

பிரதான கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
மாத்தளை.
**P.W.S.K. WIJESINGHE**
Chief Accountant
District Secretariat
Matale.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

Pradeep Yasarathna
Secretary
Ministry of Public Administration, Home Affairs,
Provincial Councils & Local Government
(Home Affairs Division)
"NILA MEDURA" Elvitigala Mawatha, Colombo 05

பிரதீப் யசரத்ன

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2024 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

கௌரவ தினேஸ் குணவர்தன (பா.உ.)

பிரதம அமைச்சர் மற்றும்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்